மாலை மலர் 30-04-2018



பொதுமக்களுக்கு நீர்-மோரை மக்களவை துணைசபாநாயகர் தம்பிதுரை, அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் வழங்கிய போது எடுத்தப்படம். அருகில் கலெக்டர் அன்பழகன், கீதா எம்.எல்.ஏ., காகித நிறுவனத்தின் செயல் இயக்குனர் கிருஷ்ணன், பொது மேலாளர் பட்டாபிராமன் உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையங்கள் திறப்பு

வேலாயுதம்பாளையம், ஏப். 30-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாயப் மேம்பாட்டு பணிகளில் ஒரு பகுதியாக, வழங்கப்பட்ட ரூ.8.25 லட்சம் மதிப்பிலான எக்ஸ்ரே மெஷின் மற்றும் பிரிண்டர் ஆகிய பொருட்கள் உள்ளடங்கிய தளவாடப்பொருட்கள் வழங்கும்விழா நடைபெற்றது. இதில் மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை, போக்குவரத்து துறை அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அந்த பொருட்களை வழங்கினர்.

மேலும் காகித நிறுவனத் தால் கரூர் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் நீர்மோர் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தனர்.

காகிதநிறுவனத்தின் சார்பாக, கோடை வெயிலை பொதுமக்கள் சமாளிக்க உதவிடும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையங்கள் வேலாயுதம் பாளையம் பைபாஸ், மண்மங்கலம் பேருந்து நிறுத்தம், கரூர் பேருந்து நிலையம், கரூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகில், கரூர் அரசு மருத்துவமனை அருகில் மற்றும் கரூர் மாவட்ட கலெக்டர் வளாகம் அருகில் என 6 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைக்கப்பட்டுள்ளது.

கரூர்பேருந்துநிலையத்தின் மத்திய பகுதியில் அமைக்கப் பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் நீர்-மோர் பந்தலை மக்களவை துணை சபாநாயகர் தம்பி துரை, அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மேலும் ஒருநிகழ்வாக,கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்கு பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.7,00,000 மதிப்பீட்டில் எக்ஸ்ரே மெஷின், மற்றும் தொழிலாளர் அரசு காப்பீட்டுத்திட்ட மருத்துவ மனை பயன்பாட்டிற்காக ரூ.86,000 மதிப்பில் புத்தக அலமாரிகள், மருந்து வைக்கும் அலமாரிகள், பெஞ்ச், மருத்துவ சிகிச்சைக்கான படுக்கை வசதிகளும், திருக்காடுதுறை ஊராட்சிக்குட்பட்ட நடையனூர் பகுதியில் அமைந்துள்ள பொது நூலகத்திற்கு ரூ.25,000 மதிப்பில் புத்தக அலமாரிகள், பீரோ, நாற்காலி, மேசை ஆகிய தளவாடப் பொருட்களும், பு.தோட்டக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் பயன் பாட்டிற்காக ரூ.20,000 மதிப்புள்ள பிரிண்டரும் என மொத்தம் ரூ.8.25 மதிப்பிலான தளவாடப் பொருட்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கரூர் கலெக்டர் அன்பழகன் , கீதா எம்.எல்.ஏ., மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் டாக்டர். ராமராஜ்,தொழிலாளர் அரசு காப்பீட்டுத்திட்ட மருத்துவ மனை டாக்டர்.ஹேமலதா , காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் , பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.